From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 120/2018

Deposition of witness for: PW -1

| | | | |
|---|---|---|---|
| Name | : Jothi | Father/Husband Name | : Elayakaruppan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 12.10.21 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் கொட்டாம்பட்டி அய்யனார் காலணியில் வசிக்கிறேன். வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் எதிர்வீட்டில் குடியிருந்து வருகிறார்கள். கடந்த 2013ம் வருடம் ஒருநாள் காலை சுமார் 9 அல்லது 10 மணிக்குள் எங்கள் வீட்டு வாசல் முன்பாக நானும், சோலைமீனா மற்றும் பிரியா ஆகியோர்கள் இருந்தபோது எதிரி ஜோதி என்பவர் தேவடியா, மூக்கரச்சி என்று அசிங்கமாக பேசினார். தங்கமீனாள் என்பவர் கட்டையால் என் தலையில் அடித்தார். 1-வது எதிரி தங்கராஜ் சம்பவ இடத்தில் வைத்து சேலையை பிடித்து இழுத்தார் நான் கீழே விழுந்துவிட்டேன். மற்ற எதிரிகளும் கட்டையை வைத்து அடித்தும், செங்கல்லால் எறிந்தார்கள். எனக்கு உடம்பில் ஊமைக்காயங்கள் இருந்தது. என் மருமமகள் சோலைமீனா என்பவருக்கு தலை உடைந்து இரத்தக்காயமானது. என் மகள் பிரியாவிற்கும் தலை உடைந்து இரத்தக்காயமானது. பிறகு அவர்கள் பேசினார்கள், எனக்கு ஞாபகமில்லை. பின்னர் நாங்கள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். நானும் என் மருமகளும் சுமார் 25 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டோம். என் மகள் ஒருவார காலம் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சம்பவத்தின்போது ஆஜர் எதிரி நந்தினி கொட்டாம்பட்டி ஊராட்சிமன்ற தலைவர் என்றால் சரிதான். சாட்சிகள் சதாசிவம் வடிவேல் ஆகியோர்களை தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் வேறு தெருவில் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். நாங்கள் வசிக்கும் அய்யனார் தெரு சிமெண்ட் ரோடு கொண்டது என்றால் சரிதான். சம்பவத்தின்போது எங்கள் வீட்டினருகே யாராவது வீடு கட்டி வந்தார்களா என்றால் இல்லை. அய்யனார் தெரு எப்பொழுதும் சுத்தமாக இருக்கும் என்றால் சரிதான். எங்கள் வீட்டு வாசலை தொட்டுதான் பொதுகுழாய் உள்ளது என்றால் சரியல்ல, எங்கள் வீட்டிற்கு தள்ளி உள்ளது. பொதுக்குழாய் பள்ளி விடுதியின் பின்னால் உள்ளது என்றால் சரிதான். அந்த குழயிலிருந்தும் எங்கள் வீட்டிற்குதண்ணீர் எடுத்துக்கொள்ளலாம் என்றால் சரிதான், பக்கமாகத்தான் உள்ளது. வீட்டிற்கு தண்ணீர் குழயர் தேவையென்றால் ஊராட்சியிடம் மனு கொடுத்துதான் இணைப்பு பெறவேண்டும் என்றால் சரிதான், தண்ணீர் வரவில்லை என்றால் எங்களையே குழாய் பதித்துக்கொள்ளுமாறு ஊராட்சி எழுத்தர் சொன்னார். அதன்படி சிறிதளவில் பள்ளம் தோண்டி ஒரு பைப் மூலம் தண்ணீர் பிடித்துக்கொண்டிருந்தோம். பொதுக்குழாயில் நாங்கள் தண்ணீர் பிடிப்பது சம்மந்தமாக எங்கள்மீது புகார் கொடுத்து ஊராட்சி தலைவர் எங்களை விசாரித்தார் என்றால் விசாரிக்கவில்லை, அதில்தான் சண்டை வந்தது. பொதுக்குழாய் என்பவது பொதுமக்கள் அணைவரும் பயன்படுத்தலாம என்றால் சரிதான். அந்த குழயரில் வரம்புமீறி டியூப்போட்டு பிடித்ததால்தான் பிரச்சனைஏற்பட்டது என்றால் நான் பொதுக்குழயரில் தண்ணீர் பிடிக்கவில்லை, எங்கள் வீட்டு குழாயில்தான் தண்ணீர் பிடித்தேன். இந்த சம்பவத்தில் எனக்கு எதிரிகளுக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டது என்றால் சரிதான். 5-வது எதிரி நந்தினி, 4-வது எதிரி தங்கமீனா எங்கள் வீட்டிலிருந்து 4 தெரு தள்ளிதான் குடியிருக்கிறார்கள் என்றால் எங்கள் வீட்டிற்கு எதிர்த்தாற்போல்தான் குடியிருக்கிறார்கள். 1 மற்றும் 2-வது எதிரிகள் மட்டும்தான் எங்கள் வீட்டிற்கு எதிரில் குடியிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. எனக்கு எழுதப்படிக் கதெரியுமா என்றால் தெரியாது, கையெழுத்து மட்டும்தான் போட தெரியும். அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகாரில் சம்பவம் எத்தனை மணி, தேதியோ, குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் பகல் நேரத்தில் சண்டை, மணி குறிப்பிட்டு தெரியாது. புகாரினை யார் எழுதியது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் நடந்த இடத்திலிருந்து சநர்தி டீச்சர், தமிழ்ச்செல்வம், அம்மாவாசை, பாப்பா ஆகியோாகள் வீடு

அருகில் உள்ளது என்றால் சரிதான். சாட்சி மீண்டும் சாந்தி வீடு பற்றி தெரியாது என்று கூறுகிறார். ஆண்டிச்சாமி, பழனிச்சாமி, நாகம்மாள் ஆகியோர்கள் வீடு அருகில் உள்ளது என்றால் சரிதான். அவர்களை நாங்கள் இந்த வழக்கில் சாட்சிகளாக கொடுக்கவில்லை என்றால் நாங்கள் யாரையும் சாட்சிகளாக கொடுக்கவில்லை. காவல் நிலையத்தில் எத்தனை மிக்கு புகார் கொடுத்தோம் என்றால் பகல் 10, 12 மணி இருக்கும். புகார் கொடுத்த பின்பு நான் எங்கு சென்றேன் என்றால் மேலூர் பெரியாஸ்பத்திரிக்கு சென்றேன். அங்கு எத்தனை மணிக்கு சேர்ந்தேன் என்றால் பகல் 11, 12 மணி இருக்கும். சம்பவத்திற்கு மறுநாள் எனக்கும் 4-வது எதிரி தங்கமீனாவிற்கும் வாய்த்தகராறு எற்பட்டது என்றால் சரிதான். இரண்டு சண்டை நடந்ததா என்றால் இல்லை, ஒரு சண்டைதான் நடநதது. 5-வது எதிரி நந்தினி அரசியல் தலைவர் கிருஷ்ண்சாமியின் ஆதரவாளர் என்றால் அதுபற்றி தெரியாது. தலைவராக இருப்பது தெரியும். நாங்கள் அரசியில் தலைவர் ஜான்பாண்டியனின் ஆதரவாளர்கள் என்றால் சரிதான். அதனால் கட்சி விசயமாக நாங்கள் இருதரப்பினரும் முரண்பாடாகத்தான் இருந்தோம் என்றால் சரிதான். எதிரிகள் யாரும் நான் சொன்னமாதிரி, இடத்தில் கம்பு மற்றும் கல்லை வைத்து தாக்கவில்லை என்றால் சரியல்ல, எங்களுக்கு காயம் எற்பட்டது. நான் 25-வது நாட்கள் சிகிச்சையில் இல்லை என்றாலும், நான் உள்நோயாளியாக இருந்த சமயத்தில் அரசு மருத்துவமனையில் எவ்வித அறிவிப்பும் இல்லாமல் நான் காணாமல் வெளியேறிவிட்டோம் என்றால் என் மகனை தாக்கி அழைத்து செல்வதாக தெரிந்ததால் நான் மருத்துவமனையிலிருந்து வெளியே வந்தேன், போலீசார் என்னை அழைத்து சென்றுவிட்டனர். நான் சிகிச்சையிலிருந்து நானானகவே வெளியேறிவிட்டேன், அதை தெரிந்துதான் போலீசார் என்னை கைது செய்தனர் என்றால் சரியல்ல. நான் என் மகள் மற்றும் மருமகள் சிகிச்சையிலிருந்ததற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வீட்டில் வைத்திருக்கிறேன். ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும், கட்சியினால் ஏற்பட்ட முரண்பாட்டை மனதில் வைத்து எதிரிகள்மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 120/2018

Deposition of witness for: PW -2

| | | | |
|---|---|---|---|
| Name | : Priya | Father/Husband Name | : Elayakaruppan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 12.10.21 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் பாண்டாங்குடி அருண் தனியார் மருத்துவமனையில் தங்கி அலுவல் நர்சாக வேலை செய்கிறேன். அ.சா.1 என் அம்மா. ஆஜர் எதிரிகளை தெரியும், அவர்கள் எங்கள் எதிர்வீட்டில் குடியிருந்து வருகிறார்கள். கடந்த 31.09.2013ம் தேதி, செப்டம்பர் மாதத்தில் 31 வராது, எனவே 30.09.13ம் தேதி காலை சுமார் 6 மணியளவில் எங்கள் வீட்டின் முன்பாக நானும், என் அம்மா அ.சா.1 மற்றும் என் அண்ணன் மனைவி சோலைமீனா ஆகியோர்கள் இருந்தபோது தங்கமீனாள் என்பவர் கம்பை வைத்து எங்கள் மூவரையும் தலையில் அடித்து இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார். அவர் எங்களை பார்த்து தேவடியா என்று தகாத வார்த்தை சொல்லி அடித்தார். எதிரி ஜோதி என்பவர் செங்கல்லை எடுத்து எங்கள்மீது எறிந்தார். எதிரிகள் நந்தினி மற்றும் மஞ்சுளா இருவரும் தகாத வார்த்தைகள் பேசி, கம்பை வைத்து எங்களை அடித்தார்கள். எதிரிகள் தங்கராஜ் மற்றும் கோவிந்தராஜ் இருவரும் என் அம்மாவை அடித்து, சேலையை உருவி அசிங்கப்படுத்தினார்கள். பின்னர் உங்களை இருக்கவிடமாட்டோம், சாகடித்துவிடுவோம் என்றும் தகாத வர்த்தைகளும் பேசி சென்றார்கள். பினன்ர் என் அம்மா காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். பின்னர் நாங்கள் மூவரும் அரசு இராஜாஜி மருத்துவமனையில் உள்நோயாளியாக 15 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

நான் எத்தனை வருடங்களாக ஸ்டாப் நர்சாக வேலை செய்து வருகிறேன் என்றால் 8 வருடங்களாக. எனக்கு எத்தனை மணிக்கு பணிக்கு செல்லவேண்டும் என்றால் நான் மருத்துவமனையில் தங்கி வேலை

செய்கிறேன். அ.சா.5 நந்தினி சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும்பொழுது ஊராட்சிமன்ற தலைவி என்றால் சரிதான். பொதுவாக ஒரு வீட்டிற்க குடிதண்ணீர் குழாய் எடுக்க வேண்டும் என்றால் ஊராட்சிமன்ற அலுவலத்தில் மனு கொடுத்துதான் இணைப்பு பெறவேண்டும் என்றால் அந்த விவரங்கள் எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் 31.09.13ல் சம்பவம் நடந்ததாக சொல்லிவிட்டு பின்னர் 30.09.13 என்று மாறுபட்டு சொன்னேன் என்றால் சரிதான். அ.சா.1 என் அம்மா கொடுத்த புகாரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த புகாரில் நான் எதுவும் சாட்சி கையெழுத்து செய்தேனா என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சம்பவம் 6 மணிக்கு நடந்ததாக சொல்லியுள்ளேன் இந்த விவரத்தை நான் போலீசார் விசாரணையில்சொலியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் என் முதுல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லியுள்ள கெட்ட வார்த்தைகளை அச.ா.1 கொடுத்த புகாரில் குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். அ.சா.5 நந்தினியும், அ.சா.6 மஞ்சுளாவும் என்னை தகாத வார்த்தைகளால் திட்டி, கம்பினால் என்னை தாக்கினார்கள் என்று சொல்லியுள்ளதை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மதுரை அரசு மருத்துவமனையில் நான் என் தாயார், என் அண்ணி சிகிச்சையிலிருந்த விவரத்தை முதல் விசாரணையில் சொல்லியுள்ளதை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சம்பவத்தின்போது நான் அங்கிருந்தேனா என்றால் இருந்தேன். நான் போலீசார் விசாரணையில் எனக்கு ஊமைக்காயம் எற்பட்டதால் சிகிச்சை எதுவும் எடுத்துக்கொள்ளவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது எதிரிகள் எறிந்ததாக சொல்லப்படும் கற்கள், கம்புகள் சம்பவ இடத்திலேயே கிடந்தது என்றால் கிடந்திருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளுக்கு முந்தைய நாளில் என் அம்மாவிற்கும், 4-வது எதிரிக்கும் குடிநீர் குழாய் பதிப்பதற்காக தோண்டப்பட்ட பள்ளத்தை பொறுத்து சண்டை நடந்தது என்றால் அதுபற்றி தெரியாது. அந்த சம்பவத்தில் அ.சா.1 4-வது எதிரியை கம்பால் தலையில் அடித்து அவருக்கு காயம் எற்பட்டு மேலூா அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. முந்தைய தினம் நடந்த சம்பவத்தைதான் மறுநாள் நடந்ததாக குறிப்பிட்டு பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. 5-வது எதிரி ஊராட்சிமன்ற தலைவி என்பதால் அவருக்கும் எங்களுக்கும் கட்சிபற்றி தகராறு இருந்ததால் அவர்மீது விரோதம் இருந்தது

என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் 1, 2வது எதிரிகள் அ.சா.1-ன் சேலையை பிடித்து இழுத்து மானபங்கப்படுத்தியதாக சொல்லியுள்ளது வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.1 என் தாயார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எந்த போலீசார் விசாரித்தனர் என்றால் எனக்கு அவர் பொய் பதவி தெரியாது. எந்த தேதியில் என்னை விசாரித்தனர் என்பதால் நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதிலிருந்து 2 நாட்கள் கழித்து. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் கொடுத்த புகாரில் அ.சா.1ஐ கைது செய்ததால் அந்த காழ்புணர்ச்சியில் இந்த புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 120/2018

Deposition of witness for: PW -3

| | | | |
|---|---|---|---|
| Name | : Solaimeena | Father/Husband Name | : Sivanesan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 12.10.21 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் கொடடாம்பட்டியில் வசிக்கிறேன். வீட்டுக்குடித்தனம் செய்கிறேன். அ.சா.1 என் மாமியார். ஆஜர் எதிரிகளை தெரியும், அவர்கள் எங்கள் எதிர்வீட்டில் குடியிருந்து வருகிறார்கள். கடந்த 30.09.2013ம் தேதி, காலை சுமார் 6 மணிக்குமேல் எங்கள் வீட்டின் முன்பாக நானும், என் மாமியார், மற்றும் என் நாத்தனார் அ.சா.2 ஆகியோர்கள் இருந்தபோது தங்கமீனாள் என்பவர் கம்பை வைத்து என் மாமியார அடித்தார். என் மாமியாருக்கு தலையில் காயமிருந்தது. எதிரி ஜோதி என்பவர் செங்கல்லை வைத்து அ.சா.2-ன் தலையில் அடித்து காயம் ஏற்பட்டது. எதிரிகள் மஞ்சுளா மற்றும் நந்தினி ஆகிய இருவரும் கட்டையால் எங்கள் மூவரையும் அடித்தார்கள். எதிாகிள் அணைவரும் அசிங்கமாக பேசியும், 1-வது எதிரி கோவிந்தராஜ் என் மாமியாரின் சேலையை பிடித்து இழுத்து அசிங்கப்படுத்தினார். மேலும் எதிரி தங்கராஜ் என்பவரும் அசிங்கமாக பேசி எங்களை அடித்தார். எனக்க தலையில் பெரிய காயம் எற்பட்டு தையல் போடப்பட்டுள்ளது. (சாட்சி உச்சந்தலையில் உள்ள காயத்தழும்பை காட்டினார்.) பின்னர் மதுரை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்ந்து நான் 15 நாட்களும், அ.சா.1, 2 13, 14 நாட்களும் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டனர். சிகிச்சையிலிருந்தபோது என் மாமியாரை போலீசார் என் கணவர் காயம்பட்டு சீரியசாக இருப்பதாக சொல்லி வென்பிளானுடன் வழுக்கட்டாயமாக அழைத்துச்சென்றுவிட்டனர். போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

மதுரை அரசு மருத்துவமனையில் எந்த வார்டில் அனுமதிக்கப்பட்டிருந்தேன், என்னை எந்த போலீசார் எத்தனை மணிக்கு அங்கு வந்து விசாரித்தனர் என்றால் அவசர கேட் என்று சொல்வார்கள் அந்த வார்டில் இருந்தேன், 09ம் தேதி காலை 9 மணிக்கு விசாரித்தனர். போலீசார் விசாரணையில் நான் ஊமைக்காயம் என்பதால் சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு நான சொல்லவில்லை. கல், கம்பு ஆகியவை சம்பவ இடத்தில் சிதறி கிடந்தது என்றால் சரிதான். அ.சா.1 நல்லதண்ணீர் குழாய் இணைப்பதற்கு மனு கொடுத்திருந்தார் என்றால் சரிதான். ஊராட்சி அலுவலர்கள் வந்து கான் போட்டுக்கொடுத்தார்கள் என்றால் சரிதான். என் மாமியார் மனு கொடுக்கவில்லை என்றாலும், தெருக்குழாயிலிருந்து நாங்களே இணைப்பை எடுத்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. ஊராட்சி மன்றத்தலைவி என்ற முறையில் அ.சா.5 அதனை கேள்வி கேட்டார் என்றால் சரியல்ல. எதிரிகள் மஞ்சுளா, நந்தினி அடித்து எனக்கும் என் மாமியாருக்கும் காயம் ஏற்படவே இல்லை என்றாலும், நாங்கள்தான் தாக்கிதான் 4-வது எதிரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் அதனை மறைப்பதற்காகத்தான் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1, 2 வது எதிரிகள் அ.சா.1ஐ மானபங்கப்படுத்தவில்லை என்றாலும் சரியல்ல. என் மாமியர், என் நாத்தனார் கேட்டுக்கொண்டதால் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 5-வது எதிரியின்மீது உள்ள காழ்புணர்ச்சி காரணமாக எதிரிகள்மீது பொய்யாக புகார் கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 6-வது எதிரி சென்னையில் வசிப்பவர் அவருக்கம் இந்த சம்பவத்திற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

From-39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 120/2018

Deposition of witness for: PW -4

| | | | |
|---|---|---|---|
| Name | : Nagammal | Father/Husband Name | : Mani |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 12.10.21 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் கொடடாம்பட்டியில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும், சம்பவம்பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சண்டையை நான் நேரில் பார்த்து விலக்கிவிடவும் இல்லை. போலீசார் வந்து வசிாரித்தபோது எனக்கு தெரியாது என்று சொல்லிவிட்டேன்.

(சாட்சி 161 குவிமுச பிரிவில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டுக்கொண்டதால் அனுமதிக்கப்படுகிறது. )

குறுக்கு விசாரணை :அரசுதரப்பில்

போலீசார் விசாரணையில் கடந்த 30.09.13ம் தேதி காலை 6.30 மணிக்கு அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் அவர்களது வீட்டின் முன்பாக இருந்தபோது எதிரிகள் 6 பேரும் அங்கு வந்து அ.சா.1ஐ பார்த்து அசிங்கமாக பேசி 4-வது எதிரி தங்கமீனாள் கட்டையாலும், 3-வது எதிரி ஜோதி செங்கல்லாலும், 5 மற்றும் 6வதுஎதிரிகளான நந்தினி மற்றும் மஞ்சுளா ஆகியோர்கள் கட்டையை கொண்டும், அ.சா.1 முதல் 3 வரையிலானவர்களை அடித்து காயப்படுத்தியும் 1-வது எதிரி அ.சா.1ஐ அசிங்கமாக பேசி சேலையை பிடித்து இழுத்து மானபங்கபடுத்தியும், 1 முதுல் 6 வரயிலான எதிரிகள் அ.சா.1 வகையராவை அசிங்கமாக பேசி கொலை மிரட்டல் விடுத்ததாகவும், சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து அவர்களுக்கு சாதகமாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 120/2018

Deposition of witness for: PW -5

| | | | |
|---|---|---|---|
| Name | : Sathasivam | Father/Husband Name | : Subbaiah |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 12.10.21 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் கொடடாம்பட்டியில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும்பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் வைத்து போலீசார் கையெழுத்து கேட்டதன்பேரில் நான் கையெழுத்து செய்தேன். பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

(சாட்சி 161 குவிமுச பிரிவில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டுக்கொண்டதால் அனுமதிக்கப்படுகிறது. )

குறுக்கு விசாரணை :அரசுதரப்பில்

போலீசார் விசாரணையில் கடந்த 30.09.13ம் தேதி பகல் 11 மணிக்கு நானும் வடிவேல் என்பவரும் சம்பவ இடத்திலிருந்தபோது கொட்டாம்பட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அங்கு வந்து எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்த பார்வையிட்டு பார்வை மகஜர் வரைபடம் தயார் செய்தார் என்றும் அதில் நானும் வடிவேல் என்பவரும் சாட்சியாக கையெழுத்து செய்தோம் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

From-39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 120/2018

Deposition of witness for: PW -6

| | | | |
|---|---|---|---|
| Name | : Vadivel | Father/Husband Name | : Muthu |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 12.10.21 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் கொடடாம்பட்டியில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும்பார்வை மகஜரிலுள்ள 2-வது கையெழுத்து என்னுடையதுதான். சுமார் 4, 5 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் கொட்டாம்பட்டி மந்தை அருகே நாங்கள் வேலைக்கு சென்றுவிட்டு திரும்ப வந்துகொண்டிருந்தபோத போலீசார் விசாரிக்க வந்ததற்காக சாட்சியாக கையெழுத்து கேட்டதன்பேரில் நான் கையெழுத்து செய்தேன். பார்வை மகஜரிலுள்ள 2-வது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.3 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

(சாட்சி 161 குவிமுச பிரிவில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டுக்கொண்டதால் அனுமதிக்கப்படுகிறது. )

குறுக்கு விசாரணை :அரசுதரப்பில்

போலீசார் விசாரணையில் கடந்த 30.09.13ம் தேதி பகல் 11 மணிக்கு நானும் சதாசிவம் என்பவரும் சம்பவ இடத்திலிருந்தபோது கொட்டாம்பட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அங்கு வந்து எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்த பார்வையிட்டு பார்வை மகஜர் வரைபடம் தயார் செய்தார் என்றும் அதில் நானும் சதாசிவம் என்பவரும் சாட்சியாக கையெழுத்து செய்தோம் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.